செ.வெ.எண்: 74 **நாள்: 25.11.2016**

பத்திரிகைச்செய்தி

டாம்கோ- ஜெருசலேம் புனிதப்பயணம் செல்ல கிறிஸ்தவர்களுக்கு தமிழக அரசின் நிதியுதவி அளிக்கும் திட்டம்-2016-17

விண்ணப்பிப்பதற்கான நிபந்தனைகள்: விண்ணப்பதாரர் /குடும்பத்தினர் தமிழ்நாட்டில் வசிக்கும் கிறித்தவமதத்தவராக இருத்தல் வேண்டும், 1.1.2017தேதியில் குறைந்தபட்சம் ஓராண்டு செல்லதக்க (One year validity)கண்டிப்பாக பாஸ்போர்ட் உடையவராக இருத்தல்வேண்டும், விண்ணப்பிக்கும் போது வெளிநாடு பயணம் மேற்கொள்ளுவதற்கு எவ்விதமான வில்லங்கங்களும் (Encumbrances) இருத்தல்கூடாது, வெளிநாடுகளில் புனிதபயணம் மேற்கொள்வதற்கு மருத்துவ மற்றும் உடற்தகுதி (Medical &Physical Fitness) பெற்றவராக இருத்தல் வேண்டும், இப்பயணம் மேற்கொள்வதற்காக ஏற்படும் செலவினத்தில் அரசு வழங்கும் நிதிஉதவி ரூ.20000/- நீங்கலாக மீதமுள்ள தொகையை செலுத்த ஒப்புதல் அளிக்கவேண்டும், ஏற்கனவே ,இத்திட்டத்தின் கீழ்ஜெருசலேம் புனிதப்பயணம் மேற்கொண்டவர்கள் மீண்டும் கண்டிப்பாக விண்ணப்பிக்ககூடாது, ஒரு குடும்பத்தில் விண்ணப்பதாரரையும் சேர்த்து அதிகபட்சம் 4 நபர்கள் பயணம் மேற்கொள்ளலாம். இதில் 2 வயது நிறைவடைந்த 2 குழந்தைகளும் இருக்கலாம். இப்பயணத்தில் 70 வயது நிறைவடைந்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிப்பதுடன் அவருக்கு துணையாக அவர் விரும்பும் ஒரு நபரை மேற்படி நிபந்தனைகளுக்குட்படும் பட்சத்தில் அவருடன் பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

பயனாளிகள் மாவட்ட வாரியாக கிறித்தவ மக்கட்தொகையின் அடிப்படையில் கணிணி மூலம் குலுக்கல் (LOT Systems) முறையில் கூர்ந்தாய்வு குழுவினரால் (Screening Committee) தெரிவுசெய்யப்படுவர். தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட பயணமுகவர்கள் மூலம் மட்டுமே இப்புனித பயணம் மேற்கொள்ள வேண்டும், இப்புனித பயணத்திற்கான காலம் மற்றும் பயணநிரல் ஜெருசலேம் புனித பயணக்குழுவால் முடிவு செய்யப்படும், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு தகவல் மற்றும் புனிதப் பயணம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் விவரம் தெரிவிக்கப்படும்.

விண்ணப்பதாரர்களுக்கு ஜெருசலேம் புனித பயணம் பற்றிய குறிப்பு:- ஜெருசலேம் புனித பயணம் மேற்கொள்வதற்கு நபர் ஒருவருக்கு அரசு நிதி உதவித் தொகை ரூ. 20000/- வழங்கப்படும், இப்புனித பயணம் பெத்லஹேம், ஜெருசலேம், நாசரேத், ஜோர்டான் நதி, கலிலேயா சமுத்திரம் மற்றும் கிறித்துவ மத தொடர்புடைய பிற புனித தலங்களையும் உள்ளடக்கியது. வெளிநாட்டு பிரச்சினைகள் நிகழுமாயின் பாதுகாப்பு கருதி சில இடங்கள் பயணிப்பது நிறுத்தப்படும், இப்புனித பயணம் பிப்ரவரி 2017 முதல் மார்ச் 2017வரை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது, விண்ணப்பதாரர் / குடும்பத்தினர் / பாதுகாவலர் தமிழ்நாட்டில் வசிக்கும் கிறித்தவ மதத்தவராக இருத்தல் வேண்டும். இதற்கு ஆதாரமாக கல்வி நிறுவனம் வழங்கியுள்ள மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate)/திருமுழுக்கு சான்றிதழ் (Baptism Certificate)/வட்டாட்சியர் சான்றிதழ்(Tahsildar Certificate) இவற்றில் ஏதேனும் ஒன்று சமர்ப்பிக்க வேண்டும், 1.1.2017 தேதியிலிருந்து குறைந்தபட்சம் ஓராண்டு செல்லதக்க(One year validity) பாஸ்போர்ட் உடையவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் போது வெளிநாடு பயணம் மேற்கொள்ளுவதற்கு எவ்விதமான வில்லங்கங்களும் (Encumbrances) இருத்தல்கூடாது.

..2..

வெளி நாடுகளில் புனித பயணம் மேற்கொள்வதற்கு மருத்துவமற்றும் உடற்தகுதி (Medical &Physical Fitness) பெற்றவராக இருத்தல் வேண்டும். இதற்கான சான்றிதழ் பதிவுபெற்ற மருத்துவரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும், புனிதபயணம் மேற்கொள்வதற்காக ஏற்படும் செலவினத்தில் அரசு வழங்கும் நிதிஉதவி ரூ.20000/- நீங்கலாக மீதமுள்ள தொகை விண்ணப்பதாரரால் செலுத்தப்படவேண்டும். இதற்கான உறுதி மொழியை கையொப்பமிட்டு விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். இந்த நிதி உதவி ரூ. 20000/- பயணம் முடிந்து திரும்பிய பின் பயண முகவருக்கு அளிக்கப்படும், ஒரு குடும்பத்தில் விண்ணப்பதாரரையும் சேர்த்துஅதிகபட்சம் 4 நபர்கள்பயணம் மேற் கொள்ளலாம். இதில்2 வயது நிறைவடைந்த 2 குழந்தைகளும் இருக்கலாம். 70 வயது நிறைவடைந்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மேலும் அவருக்கு துணையாக அவர் விரும்பும் ஒரு நபரை மேற்படி நிபந்தனைகளுக்குட்படும் பட்சத்தில் அவருடன் பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும். ஏற்கனவே இத்திட்டத்தின் கீழ் ஜெருசேலம் புனிதப் பயணம் மேற்கொண்டவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க கூடாது.

பயனாளிகள் மாவட்ட வாரியாக கிறித்தவ மக்கட் தொகையின் அடிப்படையில் கணிணி மூலம் குலுக்கல் (LOT Systems) முறையில் கூர்ந்தாய்வு குழுவினரால் (Screening Committee)தெரிவு செய்யப்படுவர். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு தகவல் அனுப்பப்படும். இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அவ்வப்போது தெரிவிக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட பயண முகவர்கள் மூலம் மட்டுமே இப்புனித பயணத்தினை கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டும், பயணக்காலம்10 நாட்கள்வரை இருக்கும். இப்புனித பயணம் சென்னையில் துவங்கி சென்னையில் முடியும். இப்புனித பயணத்திற்கான காலம் மற்றும் பயணநிரல் ஜெருசலேம் புனித பயணக்குழுவால் முடிவு செய்யப்படும், விண்ணப்பதாரர்கள் பயணம் மேற்கொள்ள விரும்பும் மாதத்தை (Option)விண்ணப்பத்தில் தவறாது குறிப்பிட வேண்டும். இருப்பினும் நிர்வாகத்தின் முடிவேஇறுதியானது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தேவையான அனைத்து இணைப்புகளுடன் அஞ்சல் உறையில் "ஜெருசலேம் புனித பயணத்திற்கான விண்ணப்பம்" என்று குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு 16.12.2016 (வெள்ளி கிழமை) மாலை 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், 807 (5வது தளம்), அண்ணாசாலை, சென்னை-600 002, மேலும் விவரங்களுக்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முதல் தளத்தில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை தொடர்பு கொண்டு, விண்ணப்பம் பெற்று உரிய காலத்திற்குள் விண்ணப்பிக்கலாம்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.